1010111000101000010101110001010100000111111010101000111101010010100010111101110101010000100010011101101101111010

## அபாகஸ் பயிற்சியாளர் ஆவதற்கு தகுதி

இளங்கலை பட்டம் பெற்ற எவருமே அபாகஸ் பயிற்சியாளர்கள் ஆவதற்கு தகுதியானவர்தான். தனது தாய்மொழியில் சரளமாக உரையாடவும், ஆங்கிலம் பேச தெரிந்திருக்க வேண்டும். பாரம்பரியமல்லாத புதுமையான கற்பித்தல் முறையில் வெற்றி பெறவேண்டும் என்ற உந்துதல் மிக முக்கியம்.

குழந்தைகளை விரும்பும் எவரும் பயிற்சியாளர் ஆகலாம். மேலும் கற்க வேண்டும் என்ற அவாவும், புதுமையான கற்பித்தல் முறைகளை கொண்டு மென்மேலும் தன்னை தகுதிபடுத்திக் கொள்ள விரும்புவோரும் பயிற்சியாளர் ஆகலாம்.

குழந்தைகளின் அறிவு மற்றும் ஆற்றலை திறனோடு வெளிக்கொணர வேண்டும் என்ற எங்களின் குறிக்கோளுக்கு உறுதுணையாக ஆர்வத்தோடும், உற்சாகத்தோடும் தோள்கொடுத்து குழந்தைகளுக்கு கற்பிக்கும் திறன் வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

தன்னிடம் உள்ள சிறந்த ஆற்றல்களை வெளிக்கொண்டு வரும் உத்வேகத்துடன் இருப்பவரே, மாணவர்களை சிறப்பாக வழிநடத்த முடியும். அத்தகைய உத்வேகம் இருக்க வேண்டும். மாணவர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டி, வகுப்பில் மேலும் பல மாணவர்களை கொண்டு வந்து சேர்க்கும் திறன் வாய்ந்தவராக இருக்க வேண்டும்.



## பயிற்சியாளர் பயிற்சி மற்றும் கட்டணம்

அபாகஸ் பயிற்சியாளர் பயிற்சி கட்டணம் ஒப்பந்தத்தின்போது தீர்மானித்தபடியே இருக்கும். ஆரம்பப் பயிற்சி 3 நாட்களுக்கு பிறகு, அடுத்த நிலை பயிற்சிகள் தலா 1 நாள் வீதம் அளிக்கப்படும்.

அபாகஸ் பயிற்சியாளர் பயிற்சிமுடித்தவுடன், அந்நபரின் கற்பிக்கும் தகுதி மதிப்பீடு செய்யப்பட்டு, மாணவர்களுக்கு கற்பிக்க அங்கீகரிக்கப்படுவர்.

## பயிற்சியாளர்களுக்கான குளோபல் கிரேடிங் எக்ஸாம் (GGE)

தகுதி வாய்ந்த அபாகஸ் பயிற்சியாளர்கள் தங்களது உலக தர வரிசையை தெரிந்துகொள்ள இந்தியன் அபாகஸ் நிறுவனத்தால் நடத்தப்படும் உலக தரவரிசை தேர்வில் (Global Grading Exam) கலந்துகொள்ளலாம்.

நல்ல தரம் வாய்ந்த பயிற்சியாளர்களே சிறந்த முறையில் குழந்தைகளுக்கு கற்பிக்க உதவும் என்ற எண்ணத்தால் இந்த தேர்வு நடத்தப்படுகிறது.

மாணவர்களுக்காக உலக தரவரிசை தேர்வுகள் நடத்தப்பட்டு கணக்கிடும் வேகம் மற்றும் துல்லியத்தை சோதிப்பதற்காக உலக தர வரிசை தேர்வுகள் (Global Grading Exam) நடத்தப்படுகிறது. உலகளவில் போட்டியிட அவர்களுக்கு இது ஒரு அரிய வாய்ப்பாகும்.

மேலும் விவரங்களுக்கு:


**Indian Abacus Pvt. Ltd.,**
Corporate Office:
No. A1-1857, 13th Main Road, 6th Avenue, Anna Nagar West,
Chennai - 600 040, Tamilnadu. Tel : 44 - 2618 2577 / 4577,
Mob: 7200 227 227, Fax : 44 - 2618 1706 / 0143.
Email : admin@indianabacus.com, www.indianabacus.com,

BETS™
BRAIN EDUCATION & TRAINING SKILLS

Regional off: No.685, 11th Main,
2nd Block, Rajaji Nagar,
Bangalore - 560 010,
Karnataka.
Tel : 080 - 2332 8844
www.indianabacus.in


# Indian Abacus™

Abacus Mental Arithmetic Education

## Abacus Tutor




புதிய தலைமுறையின் அபாகஸ்



10101110001010000101011100010101000001111111010101000111101010010100010111101110101010000100010011101101101111010

## அபாகஸ் பயிற்சியாளர் ஆவது எப்படி?

- இந்தியன் அபாகஸ் நிறுவனத்தால் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களது பாடத்திட்டங்களை நடத்துவதற்கு தகுதியும் தேர்ச்சியும் பெற்று இருக்க வேண்டும்.
- அபாகஸ் பயிற்சியாளர் முழு நேர பயிற்சியாளராக செயல்படுவோரே விரும்பத்தக்கவர்.
- இந்தியன் அபாகஸ் நிறுவனம், அதன் முகவர் அபாகஸ் பயிற்சியாளருடன் ஒப்பந்தம் செய்துகொள்வர்.
- பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பிக்கும் நபர் தனது புகைப்படம் மற்றும் Bio-data அளிக்கவேண்டும்.
- கிளை உரிமையாளர் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். பிரான்ச்சாயிஸி மற்றும் இந்தியன் அபாகஸ் முதன்மை பயிற்றுவிப்பாளர் நேர்காணல் நடத்தி தேர்வு செய்து பயிற்றுவிக்கப்படுவார்.
- தகுதி: பட்டப்படிப்புடன் ஆங்கிலம் மற்றும் உள்ளூர் மொழியில் சரளமாக உரையாட வேண்டும்.
- ஊதியம்: ஒப்பந்தப்படி மற்றும்மாணவரிடமிருந்து கட்டணம் பெற்றவுடன் பயிற்சியாளர்களின் ஊதியம் வழங்கப்படும்
- பிரான்சாயிடமிருந்து பயிற்சியளித்தற்க்குரிய, முடிவு செய்யப்பட்டுள்ள விலைப்பட்டியலை சார்ந்தே, பயிற்சியாளர் களுக்கு ஊதியம் (Remuneration) பெற அறிவுறுத்தப்படுகிறார்கள்.




## அபாகஸ் பயிற்சியாளரின் பங்கு

தகுதி வாய்ந்த அபாகஸ் பயிற்சியாளர் சரியான தகுதியுடன் புரிந்துகொள்ளும் திறன், இன் முகத்துடன் பழகக்கூடிய பாங்கு கொண்டவராக இருக்க வேண்டும்.

அத்தகையவரை தேர்ந்தெடுத்து அவரின் முழு திறனையும் வெளிக்கொணர வேண்டும்.



குழந்தைகளுக்கு கற்பிக்கும் மிக உன்னதமான பணி அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஓர் அபாகஸ் பயிற்சியாளர் பன்முக திறன்களை உடையவராக இருக்கவேண்டும்.

பயிற்சியாளர் நல்லொழுக்கம் காப்பவராக, திறமையாக மற்றும் தகவல்களை பரிமாற தெரிந்தவராக, சரியாக மதிப்பிடத் தெரிந்தவராக, ஒரு வகுப்பறையை நிர்வகிப்பவராக, ஆலோசகராக, சமயத்தில் பெற்றோராகவும் இருக்கக்கூடிய சிறந்த தகுதிகள் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

அபாகஸ் மற்றும் பயிற்சியாளரின் வேலை 2 மணி நேரத்தில், கற்பிப்பதோடு முடிவதில்லை. நேர்மையான பயிற்சியாளர் பணிக்கு அவர் தன்னை அர்ப்பணிக்க வேண்டும்.

மாணவர்களுக்கு உதவுவது, வீட்டு பாடங்களை திருத்துவது, தனது வகுப்பின் தரத்தை மேம்படுத்துவது, தேர்வு தாள்களை திருத்துவது, படிப்பில் பின்தங்கிய மாணவர்களுக்கு கூடுதல் வகுப்புகள் எடுப்பது, பெற்றோர்களை சந்திப்பது முதலிய பல்வேறு வேலைகளை அவர் செய்ய வேண்டும். தனது நேரத்தை இதற்கெல்லாம் இன் முகத்துடன் செலவிடுபவரே சிறந்த அபாகஸ் பயிற்சியாளராவார்.

சிறு குழந்தைகளுக்கு தெளிவாக விளங்குமாறு கற்றுத்தரக் கூடிய திறன் மற்றும் பொறுமை வேண்டும்.

## பாடத்திட்டம் கட்டமைப்பு மற்றும் நிலைகள்

- 24 மாதங்களில் 8 நிலைகளை ஒரு நிலைக்கு 3 மாத காலம் படிக்கக் கூடியதாக பாடங்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன. வாரத்தில் ஒருநாள் 2 மணி நேரம் ஒரு மாணவன் வகுப்பறை பயிற்சிக்கு உட்படுத்தப்படுகிறான்.
- ஒவ்வொரு நிலையிலும் தேர்வுகள் நடத்தப்பட்டு தேர்ச்சி பெறின் மாணவர் அடுத்த நிலைக்கு தகுதி பெறுவார்.

### அபாகஸ் பயிற்சியாளர் கட்டணம்

| மையம் | ஒப்பந்த காலம் 3 வருடங்கள் | புதுப்பித்தல் காலம் 3 வருடங்கள் |
|---|---|---|
| A | ₹ 20,000 | ₹ 10,000 |
| B | ₹ 15,000 | ₹ 7,500 |
| C | ₹ 10,000 | ₹ 5,000 |

### அபாகஸ் பயிற்சியாளர் கட்டண பங்குகள்

| மையம் | கட்டண வகை | ஆசிரியரின் ஊதியம்/ ஒரு மாணவருக்கு |
|---|---|---|
| A | ஒரு நிலை | ₹ 390 |
| B | ஒரு நிலை | ₹ 300 |
| C | ஒரு நிலை | ₹ 180 |

ஒவ்வொரு மாணவனும் தனித்தன்மையுடைவர் என்பதை அறிந்து வைத்து இருப்பவர் ஒரு நல்ல பயிற்சியாளர். மாணவர்களின் கேள்விகளுக்கு கவனத்துடன் கேட்டு, பொறுமையுடன், பதில் அளித்து அவர்களின் திறன்களை வளர்ப்பது கடமையாகும்.

வீட்டு பாடங்களை திருத்துவது, மற்றும் மாணவர்களின் கணக்கிடும் வேகத்தை மேம்படுத்துவதற்கு உதவிட வேண்டியதும் அபாகஸ் பயிற்சியாளரின் கடமையாகும்.

